# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, விதைச் சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, ஒகத்து மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, விதைச் சட்டம்

[2003 யூலை மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 61/98
4564

## விதை மற்றும் நடுகைப்பொருள்கள் என்பவற்றின் தரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டமானது 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, விதைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *குறுக்கப்பெயர்.*

## பாகம் I

### சட்டத்தின் நிருவாகம்.

**2.** இச்சட்டத்தில் இதன் பின்னர் "பணிப்பாளர் தலைமை யதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும், கமத்தொழில் பணிப் பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் பொதுவான நிருவாகத் திற்குப் பொறுப்பானவராயிருத்தல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தினால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள பணி களை நிறைவேற்றுதலும் வேண்டும். *கமத்தொழில் பணிப்பாளர் தலைமையதிபதி சட்டத்தை நிருவகிப்பதற்குப் பொறுப்புடைய வராதல்.*

**3.** பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் ஏற்பாடு களைக் கொண்டு நடாத்துவதில் அல்லது அவற்றிற்குப் பயன்கொடுப்பதில் அவருக்கு உதவும் நோக்கத்திற்கு அவசிய மாகக்கூடியவாறான கமத்தொழில் திணைக்களத்தின் அத்தகைய அலுவலர்களை பதவிப்பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்கள் இதனகத்துப்பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர். *அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்.*

## பாகம் II

### தேசிய விதைப் பேரவையைத் தாபித்தல்

**4.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய விதைப் பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *தேசிய விதைப் பேரவையைத் தாபித்தல்.*

(2) பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது,

(i) செயலாளர் ;

(ii) பணிப்பாளர் தலைமையதிபதி ; அத்துடன்

(iii) கமத்தொழில் திணைக்களத்தில் விதைச் சான்றளிப்புக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர் (இவர் இச்சட்டத்தில் இதன் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பிடு செய்யப்படுவார்) ;

(iv) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ;

(v) 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ஆ) விதை உற்பத்தியாளர்கள், விதை பயன்படுத்துவோர் மற்றும் விதை இறக்குமதி செய்வோர் என்போரிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் நான்கிற்கு மேற்படாத உறுப்பினர்கள் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படுவர்) ஆயினும் இரண்டு ஆட்கள் விதை பயன்படுத்துபவாகளான விவசாய சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) செயலாளர், பேரவையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

5. (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்கினால் ஒழிய மூன்று வருடக் காலப்பகுதியொன்றிற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்நேரத்திலும் அமைச்சருக்கு அப்பயன்பட முகவரியிட்டெழுதும் கடிதம் ஒன்றின் மூலம் பதவி விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது அமைச்சரினால் அக்கடிதம் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுடையதாகவருவதாதலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக, பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சர், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு ஒரு பிரதிநிதியை நியமிக்கலாம்.

(4) அமைச்சர், எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன் அதன்மேல் அவ்வுறுப்பினர் அவரது பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் பதவி விலகலினால், பதவியிலிருந்து அகற்றப்படுவதினால் அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்குகின்றவிடத்து, அமைச்சர், அவரது இடத்திற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகிக்கலாம்.

(6) காலங்கழிதலினால் பதவியை வறிதாக்குகின்ற நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(7) பேரவையின் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையில் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

(8) இச்சட்டத்தினதும் அதன் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியினதும் வேறு ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவலைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலுமான நடைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

6. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :— பேரவையின் பணிகள்.

(அ) உயர் தரத்திலான விதை மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியையும் விநியோகத்தையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிகளையும் கோட்பாடுகளையும் தாபித்தல் ;

(ஆ) விதை மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தி முன்னேற்றத்தின் காலாகால மீளாய்வை மேற்கொள்ளுதல் ;

(இ) தரமான விதை மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தி தொடர்பானவையும் விதையையும் நடுகைப் பொருட்களையும் கமக்காரர்களுக்கு வழங்குதல் தொடர்பானவையுமான எல்லாக் கருமங்கள் பற்றியும் அமைச்சருக்கும் வேறு இயைபான அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்குதல்;

(ஈ) விதை மற்றும் நடுகைப் பொருட்கள் தொழில் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில், காலாந்தரமாக விதையினதும் நடுகைப் பொருட்களினதும் தரநியமங்களை மீளாய்வு செய்தல் ;

(உ) விதைகளினதும் நடுகைப் பொருட்களினதும் முளைத்தல், வாழ்தகவு, பிறப்பியல் தூய்மை, பௌதிகத் தூய்மை, தோற்றம் என்பவற்றிற்குரிய நேர்தான ஆகக்குறைந்த வரையறைகளையும் சந்தையில் கிடைக்கக்கூடிய விதைகளில் பிறப்பியல் மாசுகள், சேதமடைந்த விதைகள், விதைநீர் உள்ளடக்கங்கள் மற்றும் களைவிதைகள் உட்பட, பீடைகள் என்பவற்றின் அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய வரையறைகளையும் தாபித்தல் ;

(ஊ) சந்தையில் கிடைக்கற்பாலதான விதை கொள்கலன்களுக்கும் நடுகைப் பொருட்களுக்குமான ஆகக் குறைந்த சுட்டுத்துண்டிடுதல் தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(எ) சந்தையில் கிடைக்கற்பாலதான விதையின் ஒவ்வோர் இனம், வகை அல்லது வர்க்கத்துக்குமான விதை கொள்கலன்களின் தரத்தையும் ஆகக்குறைந்த அளவையும் தீர்மானித்தல் ; அத்துடன்

(ஏ) புதிய தாவர வர்க்கங்களின் பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

பேரவையின் தத்துவங்கள்

7. பேரவையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கமத்தொழில் திணைக்களத்தின் முகவர் நிலையங்களினால் ஏற்பாடு செய்யப்படும் எவையேனும் சேவைகளுக்கான அல்லது வசதிகளுக்கான அத்துடன் விதை கையாளுபவர்களைப் பதிவுசெய்வதற்கான கட்டணங்களை விதந்துரைத்தல் ;

(ஆ) விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றுக்கான தேவையினை அடையாளம் காணுதலும் தரமான விதைகளையும் நடுகைப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவியின் ஏற்பாட்டிற்கு வசதியளித்தலும் ;

(இ) தனியார் துறை விதைத் தொழில்துறையை அபிவிருத்தி செய்யுமுகமாக பொதுத்துறை முகவர் நிலையங்களிடையே ஒருங்கிணைத்தலும் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்குக் கவனஞ்செலுத்தலும் ;

(ஈ) நிலைபேறான விதை மற்றும் நடுகைப் பொருட்கள் தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படும் நிதி மற்றும் ஆள்வலு மூலவளங்களைப் பெற்றுக்கொள்ளுதல் ; அத்துடன்

(உ) பேரவையின் முடிவுகளைக் கொண்டு நடாத்துவதற்கு விசேட குழுக்களை நியமித்தல்.

## பாகம் III

## பதிவு நடவடிக்கைமுறை

விதை கையாளுபவர்களைப் பதிவுசெய்தல்

8. (1) விதை கையாளுபவர்கள் அனைவரும் பணிப்பாளருடன் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும்.

(2) பதிவுசெய்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளரினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பணிப்பாளருக்குச் செய்யப்படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழான பதிவு ஒன்றானது. —

(அ) விண்ணப்பகாரர் பதிவுக்கட்டணத்தைச் செலுத்தியதின் மேல் வழங்கப்படல் வேண்டும் ;

(ஆ) எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் சார்பிலான எந்த நியதிகளுக்கமைய பதிவானது வழங்கப்பட்டதோ அந்த நியதிகள் எவற்றுக்கும் இணங்க ஏலவே இல்லாதாக்கப்பட்டிருந்தாலன்றி, இரண்டு வருட காலப்பகுதி ஒன்றிற்குத் தொடர்ந்து வலுவிலிருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(இ) எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய பதிவானது வழங்கப்படுகின்றதோ அந்த நியதி நிபந்தனைகளை குறித்துக்காட்டுதல் வேண்டும்.

பதிவைப் புதுப்பித்தல்.

**9.** எட்டாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பதிவு ஒன்றானது, பதிவுப் படிவத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள முடிவுறும் தேதிக்கு முன்னர் பணிப்பாளர்களுக்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

பதிவை இல்லாதாக்குதல்.

**10.** (1) பதிவில் சம்பந்தப்பட்டுள்ள விதை கையாளுபவர் :—

(அ) எந்த நிபந்தனைகளுக்கமைய அத்தகைய பதிவானது வழங்கப்பட்டதோ அந்த நிபந்தனைகள் எவற்றையும் மீறியுள்ளார் என ;

(ஆ) அத்தகைய பதிவில் தரப்பட்டுள்ள எவையேனும் பணிப்புரைகளை நிறைவேற்றத் தவறியுள்ளார் என ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளார் என ;

பணிப்பாளர் திருப்திப்பட்டால், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவை அவர் இல்லாதாக்கலாம்.

(2) இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தலானது, பதிவு செய்யப்பட்ட விதை கையாளுபவருக்கு எழுத்தில் அறிவிக்கப் படல் வேண்டும்.

(3) (அ) பதிவொன்றை வழங்க மறுக்கின்ற ;

(ஆ) பதிவொன்றைப் புதுப்பிக்க மறுக்கின்ற ; அல்லது

(இ) பதிவொன்றை இல்லாதாக்குகின்ற,

பணிப்பாளரின் முடிவினால் இடருறுகின்ற ஆள் எவரும், அவருக்கு அத்தகைய முடிவு தெரிவிக்கப்பட்ட முப்பது நாட்களினுள், அத்தகைய முடிவுக்கெதிராக செயலாளருக்கு, அத்தகைய மேன்முறையீட்டிற்கான ஏதுக்களைக் கொடுத்து, எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய மேன்முறை யீடு 15 ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீட்டுக் குழாத்தினால் முடிவுசெய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### நடவடிக்கை முறை

பரிசோதிக்கும் நோக்கத்திற்காக வளவுகளினுட் புகுதல்.

**11.** (1) ஏதேனும் வளவுகளினுள் அங்கு காணப்படும் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றைப் பரிசோதிக்கும் நோக்கத்திற்காகவும் பரிசோதனை செய்து பரீட்சிப்பதற்காக அத்தகைய பொருட்களின் தோதான மாதிரிகளை எடுப்பதற் காகவும் நியாயமான எல்லா நேரங்களிலும் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதற்கான நியாயமான ஏதுக்கள் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், உதவியாளர்களுடனோ உதவியாளர்கள் இன்றியோ, உட்புகுவது சட்டபூர்வமானதாதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விதையின் அல்லது நடுகைப் பொருட்களின் பயன்படுத்துநர் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் அல்லது விடயத்திற் கேற்றாற்போல அத்தகைய வளவுகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அத்தகைய பரிசோதனைக்காகவும் பார்வையிடுவதற்காகவும் நியாயமான எல்லா வசதிகளையும்

வழங்குதல் வேண்டும். அத்தகைய வளவுகளுக்குள் நுழைவதன் முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் ஆளடையாளம் அவ்வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சி யாளருக்குக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பார்சித்தலின் பின்னரும் பரிசோதனையின் பின்னரும் எவையேனும் வளவுகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கப்படும், பதனிடப் படும் அல்லது விற்பனைக்கு முனையப்படும் ஏதேனும் விதை மற்றும் நடுகைப்பொருட்கள் என்பன இச்சட்டத்தின் அல்லது இதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடு களை மீறி உள்ளதென அல்லது பேரவையினால் விதித்துரைக் கப்பட்ட தராதரங்களுக்கு இசைவாகவில்லையென பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் திருப்திப்பட்டால் அப்பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் தமது முடிவை அதற்கான காரணங்களுடன் அத்தகைய விதையின் அல்லது நடுகைப் பொருளின் பயன்படுத்துநருக்கு, உற்பத்தியாளருக்கு அல்லது இறக்குமதியாளருக்கு அல்லது விடயத்திற்கு ஏற்றாற்போல அவ்வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப் பாட்சியாளருக்கு அத்தகைய பணிப்பின் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதை அல்லது நடுகைப் பொருட்கள் தொடர்பில் அத்தகைய தடுப்பு வழங்கல்களை எடுக்குமாறு அல்லது அத்தகைய வேலைகளை நிறைவேற்றுமாறு கூறும் எழுத்திலான தமது முடிவை அதற்கான காரணங்களுடன் பணித்தல் வேண்டும்.

(3) அத்தகைய விதையின் அல்லது நடுகைப் பொருட்களின் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் அல்லது விடயத்திற்கேற்றாற்போல சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சி யாளர், 15 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டுக் குழாத்தினால் முடிவுசெய்யப்படுவதற்காக, செயலாளருக்கூடாக அத்தகைய பணிப்புக்கெதிராக மேன்முறையீடொன்றை முன்வைத்தா லொழிய, (2) ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்பாளர் தலைமையதி பதியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் செய்யப்பட்ட ஏதேனும் பணிப்புரையுடன் இணங்கியொழுகுதல், விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய உற்பத்தியாளரின் அத்தகைய வளவுகளின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் கடமையாதல் வேண்டும்.

**நுழைதல் முதலிய காரணத்தினால் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது அவர்களுக்கு உதவுகின்ற ஆள் அடாத்தாகப் புகுகின்றவராகக் கருதப்படலாகாது.**

12. பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் அல்லது அவர்களுக்கு உதவுகின்ற எவரேனும் ஆள் ஏதேனும் வளவுகளினுட்புகுகின்ற காரணத்தினால் அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்டதும் ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் ஏற்பாடுகள் எதனையும் கொண்டு நடாத்துகையில் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதற்காகவும் அது தீய எண்ணத்துடனும் நியாயமான மற்றும் நேர்தகவுக் காரணம் இல்லாமல் செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது செய்யாதுவிடப் பட்டிருந்தாலொழிய, எவ்வித சேதவீட்டிற்கும் அல்லது குற்ற வழக்குக்கும் ஆளாதலாகாது.

**வழிவகைகளைக் கொண்டு நடாத்தி அல்லது வேலையை நிறைவேற்றி அதற்கான செலவுகளை அறவிடுவதற்கு பணிப்பாளர் தலைமை யதிபதிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உள்ள தத்துவம்.**

13. (1) ஏதேனும் விதையை அல்லது நடுகைப் பொருட்களைப் பயன்படுத்துபவர், உற்பத்தி செய்பவர், இறக்குமதி செய்பவர் அல்லது ஏதேனும் வளவுகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் 11 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் வளவுகளில் அல்லது வளவுகளின் மீது அத்தகைய விதை அல்லது நடுகைப்பொருட்கள் தொடர்பில் ஏதேனும் வழிவகைகளைக் கொண்டுநடாத்துமாறு அல்லது ஏதேனும் வேலையை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது பணிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய தேவைப்பாட்டுடன் அல்லது பணிப்புரையுடன் இணங்கியொழுகத் தவறினால், அதனை அசட்டை செய்தால் அல்லது மறுத்தால், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், உதவியாளர்களுடனும் அல்லது உதவியாளர்களின்றி, அத்தகைய வழிவகைகளைக் கொண்டுநடாத்தும் அல்லது அத்தகைய வேலையை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அத்தகைய வளவுகளினுட்புக லாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் வளவுகளினுட் புகுகின்ற பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது தத்துவங் களைப் பிரயோகிப்பதனை இயலச்செய்யும் நோக்கத்திற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய உபகரணத்தை, இயந் திரத்தை மற்றும் வாகனங்களைத் தன்னுடன் எடுத்துச் செல்லலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் வளவுகளில் அல்லது வளவுகளின்மீது ஏதேனும் வழிவகைகளைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது ஏதேனும் வேலையை நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உறப்படும் நியாயமான எல்லாச் செலவுகளும் அரசினால் உறப்படும் எவையேனும் செலவுகளும், அத்தகைய வழிவகைகளைக் கொண்டுநடாத்துமாறு அல்லது அத்தகைய வேலையை நிறைவேற்றுமாறு இப்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப் பட்டுள்ளவரான அல்லது பணிக்கப்பெற்றுள்ளவரான ஆளினால் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் இதன்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளமுறையில் அவ்வாளிடமிருந்து அறவிடப்படலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான எவையேனும் நியாயமான செலவுகள், நீதிவான் நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய செலவுகளின் தொகையானது, விஞ்சக்கூடியது எப்படியிருப்பினும், அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் குற்றப்பணம் ஒன்றென்றாற்போன்று அதேமுறையில், எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அத்தகைய ஆள் வசிக்கின்றாரோ, அல்லது வழிவகைகள் கொண்டுநடாத்தப் பட்டனவோ அல்லது வேலை நிறைவேற்றப்பட்டதோ அந்த நீதிவான் நீதிமன்றத்திற்கு, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அறவிடப்படலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழ் எவரேனும் ஆளிடமிருந்து செலவுகள் அறவிடப்படுதலானது, இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட தேவைப்பாட்டுடன் அல்லது பணிப்புரையுடன் அவர் இணங்கி யொழுகத் தவறியமை, அதனை அசட்டை செய்தமை அல்லது மறுத்தமை காரணமாக அவர் ஆளாகக்கூடியதான ஏதேனும் தவறுக்கான ஏதேனும் வழக்குத் தொடர்தலிலிருந்து அத்தகைய ஆளை விடுவிப்பதாகாது.

## பாகம் V

### விதைச் சான்றளிப்புச் சேவை

14. (1) பணிப்பாளர் – விதைச் சான்றளிப்புச் சேவை.

(அ) இலங்கையில் வளரும் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றுக்கு சான்றளிப்பதற்கான பிரத்தியேக உரிமையைப் பிரயோகித்தல் வேண்டும்;

(ஆ) விதைச்சான்றளிப்புச் சேவையின் அடையாளத்துடன் அல்லது குறியுடன் இலச்சினைகள், ஒட்டுத் துண்டுகள் முத்திரைகள் மற்றும் சுட்டுத்துண்டுகள் என்பவற்றை வழங்குதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் பயிர்வர்க்கத்தின் அல்லது கலப்புப்பயிரின் ஏதேனும் உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட விதை கமத்தொழில் திணைக்களத்தின் விதைச்சான்றளிப்புச் சேவையினால் வெளியிடப்பட்டு நிருவகிக்கப்படும் "சான்றளிக்கப்பட்ட விதையின்" உற்பத்திக்கான விதிகளுக்கிணங்க அது உற்பத்தி செய்யப்பட்டிரா விட்டால், அந்தப் பயிர்வர்க்கத்தின் அல்லது கலப்புப்பயிரின் சான்றளிக்கப்பட்ட விதையாக விவரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதிலிருந்து அதனைத் தடைசெய்தல் வேண்டும், அத்துடன் இறக்குமதிசெய்யப்பட்ட விதையின் விடயத்தில், விதையின் மூல உற்பத்தி நாட்டிலுள்ள விதைச்சான்றளிப்பின் உத்தியோகபூர்வ முறைமையை கமத் தொழில் திணைக்களத்தின் விதைச்சான்றளிப்புச் சேவை அங்கீகரித்திருந்தாலொழிய, அந்தப் பயிர் வர்க்கத்தின் அல்லது கலப்புப்பயிரின் விதை எதுவும் "சான்றளிக்கப்பட்ட விதை" என விவரிக்கப்பட்டு விற்பனைசெய்யப்படுவதைத் தடுத்தல் வேண்டும் ;

(ஈ) விதையின் உற்பத்தியையும் பதப்படுத்தலையும் கண்காணித்து சான்றளிப்பதற்கான தராதரங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா எனச் செவ்வைபார்த் தலும் வேண்டும் ;

(உ) வளவுகளினுட்புகுந்து விதை பதப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளைப் பரிசோதித்தல் வேண்டும் ;

(ஊ) விதை விற்பனையாகும் முறையையும் அதன் அடையாளத்தையும் பற்றிய இடாப்புகளைச் செவ்வைபார்த்தல் வேண்டும் ;

(எ) பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட விதைச் சான்றளிப்புக்கான நியமங்களை அமுலாக்குதல் வேண்டும் ;

(ஏ) வெளிக்களப் பரிசோதித்தல், விதைச்சோதனை, விதை பதப்படுத்தலைக் கண்காணித்தல், விதை மாதிரிகளைச் சேகரித்தல், சான்றளிப்புக்குத் தகைமை பெறும் விதைத்தொகுதிகளுக்குச் சான்றளிக்கப்பட்ட சுட்டுத்தண்டுகளை ஒட்டுதல் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளைப் பயன்படுத்துதல் வேண்டும் ;

(ஐ) சான்றளிக்கப்பட்ட விதையானது விதித்துரைக்கப்பட்ட முறையில் பொதியிடப்பட்டு, இலச்சினையிடப்பட்டு சுட்டுத்துண்டு ஒட்டப்படுதல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஒ) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதிசெய்யப்பட்ட விதைகளின் மாதிரிகளை எடுத்து விதித்துரைக்கப்பட்ட தராதரங்களுடன் இணங்கியுள்ளனவா என செவ்வைபார்த்தல் வேண்டும் ;

(ஓ) விதைச்சான்றளிப்பதற்கான தராதரங்களைத் தாபித்து வெளியிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஔ) சான்றளிக்கப்பட்ட விதை மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்கள் பற்றிய நிரலொன்றைப் பேணுதலும் வெளியிடுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக கமத்தொழில் திணைக்களத்தின் விதை பரீட்சிக்கும் ஆய்வுகூடங்கள் பெயர்குறிக்கப்பட்ட ஆய்வுகூடங்களாகவிருத்தல் வேண்டும்.

## பாகம் VI

### மேன்முறையீடுகள்

15. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மேன்முறையீட்டுக் குழாம் ஒன்று அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும். மேன்முறையீடுகள்.

(2) மேன்முறையீட்டுக் குழாமானது செயலாளரையும் விதை தொழில்நுட்பவியலாளர் ஒருவரையும் விதை நோயியலாளர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) செயலாளர் அத்தகைய மேன்முறையீட்டுக் குழாத்தின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டுக் குழாம் செயலாளரினது மேன்முறையீடு கிடைக்கப்பட்டதன் பின்னர் அறுபது நாட்களுக்குப் பிந்தாமல் அதன் முடிவை வழங்குதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டுக் குழாத்தின் முடிபு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதுடன் செயலாளரினால் மேன்முறையீட்டாளருக்கும் பணிப்பாளருக்கும் உடனடியாகத் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) மேன்முறையீட்டுக் குழாத்தின் உறுப்பினர்களுக்கு நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படலாம்.

## பாகம் VII

### தவறுகளும் தண்டங்களும்

16. (1) இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டைச் சட்டபூர்வமான அதிகாரமின்றி அல்லது காரணமின்றி மீறுகின்ற அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் அவர் செய்ய வேண்டிய அல்லது செய்யாது தவிர்க்கவேண்டிய எதனையும் செய்கின்ற அல்லது செய்யாது விடுகின்ற அல்லது தவறுகள்.

இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் பணிப்பாளர் தலைமையதிபதியை, பணிப்பாளரை அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை அல்லது அவர்களுக்கு உதவுகின்ற எவரேனும் ஆளை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற அல்லது எதிர்ப்பதில் அல்லது தடுப்பதில் உதவுகின்ற அல்லது எவரேனும் ஆளை எதிர்க்க அல்லது தடைசெய்யத் தூண்டுகின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியான ஆள் எவரும் நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு மாதத்திற்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவிற்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் தவறுகள்.

17. இச்சட்டத்திற்கெதிராக ஏதேனும் தவறானது ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருந்தால், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பளர், முகாமையாளர், செயலாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவரும் ; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழுவானது குழுமமொன்றாக விருந்தால், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் ஒவ்வொரு முகாமையாளரும்,

அத்தவறானது அவரது சம்மதமில்லாமல் அல்லது ஒருப்பாடடில்லாமல் புரியப்பட்டதெனவும், அத்தகைய தவறுபுரியப் படுவதனைத் தடுப்பதற்கு வேண்டிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் எனவும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**18.** (1) அமைச்சர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது, எவை தொடர்பில் இச்சட்டத்தின்மூலம் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் பின்வருவனவற்றை விதித்துரைத்து ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) சந்தைப்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது இறக்குமதிசெய்யப்பட்ட விதைகளின் அல்லது நடுகைப்பொருட்களின் தரம் மற்றும், சந்தைப் படுத்தப்படும் விதைகளினதும் நடுகைப்பொருட் களினதும் சுட்டுத்துண்டிடும் தேவைப்பாடுகள் ;

(ஆ) விதை மற்றும் நடுகைப்பொருளின் தர நியமத்திற் கான சான்றளிப்பு வழங்கப்படவேண்டிய முறை;

(இ) விதை பயன்படுத்துவோரின் பாதுகாப்பும் ; விதை மற்றும் நடுகைப்பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியின் மேம்பாடும் :

(ஈ) விதை மற்றும் நடுகைப்பொருட்கள் என்பவற்றைப் பரிசோதனையிடல், மாதிரி எடுத்தல், பகுப்பாய்வு செய்தல், சோதித்தல் அல்லது பார்ட்சித்தல் என்பவற்றிற்கான நடைமுறை ;

(உ) விதை மற்றும் நடுகைப்பொருட்கள் என்பவற்றுக் கான சுட்டுத்துண்டிடல் நடைமுறை மற்றும் சுட்டுத் துண்டுகளில் இடம்பெறவேண்டிய விவரங்கள் அத்துடன் தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்திக்கான விதிகள் மற்றும் நடைமுறைகள் ;

(ஊ) குழுக்களைத் தாபித்தலும் அவற்றின் பணிகளும் ;

(எ) விதைகளினதும் நடுகைப்பொருட்களினதும் ஒழுங்கு படுத்தப்பட்ட இனங்கள், வகைகள் மற்றும் வர்க்கங் கள் என்பவற்றைக் குறித்துரைத்தல் ;

(ஏ) பரீட்சிப்பதற்கான நடைமுறைகளும் நியமங்களும்; அத்துடன்

(ஐ) ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சேவைகளுக்கும் செயற் களுக்கும் அறவிடப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானித்தல்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென் பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ் வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளு மன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதன் அங்கீகாரம் மறுக் கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் ஒழுங்குவிதியானது நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**19.** பேரவையானது எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத் தினால் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

சட்டத்தின் ஏற்புடைமை.

**20.** இச்சட்டத்திலுள்ளது எதுவும், ஆளொருவரினால் வேறு ஆள் ஒருவருக்கு விதைக்கும் அல்லது நடும் நோக்கத்திற்காக அவ்வாளினால் பயன்படுத்தப்படுவதற்கென நேரடியாக அவரது சொந்த வளவுகளில் அவ்வாளினால் விற்பனை செய்யப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஏதேனும் விதைக்கு அல்லது வளர்க்கப்பட்ட ஏதேனும் வகைக்கு அல்லது ரகத்திற்கு, ஏற்புடையதாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**21.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**22.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"சான்றளிக்கப்பட்ட விதை" என்பது, வளர்ப்பின விதை, அடிப்படை விதை, முன்மூல விதை, நியமன விதை, மற்றும் கரு விதை என அடையாளம் காணப்பட்ட தனித்துவமான விதை வகுப்புகளையும் இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான "விதைச் சான்றளிக்கப்பட்ட விதை" எனச் சுட்டுத்துண்டு இடப்பட்ட சான்றளிக்கப்பட்ட விதை எனப் பெயரிடப் பட்ட வகுப்பையும் குறிப்பீடுசெய்கின்றது;

"இறக்குமதியாளர்" என்பது எந்த ஆளினுடைய செயலினால் எவையேனும் விதைகள் அல்லது நடுகைப்பொருட்கள் இலங்கையில் இறக்கப்படுகின்றதோ அல்லது இலங்கைக்குள் வந்துசேர்கின்றதோ அந்த எவரேனும் ஆள் என்று பொருள்படும் ;

"பீடை" என்பது, தாவரத்திற்கு அல்லது தாவர உற்பத்திப் பொருட்களுக்கு ஊறுபாட்டை அல்லது சேதத்தை அல்லது பொருளாதார இழப்பை விளைவிக்கக்கூடிய ஏதேனும் உயிரியல் பொருளை உள்ளடக்குமென்பது டன் களை விதையையும் உள்ளடக்குதல் வேண்டும்;

"வளவுகள்" என்பது தாவரங்களை வைத்திருப்பதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, பதனிடுவதற்கு, நாற்று நடுவதற்கு அல்லது வளர்ப்பதற்கு அல்லது, விதை களை வைத்திருப்பதற்கு அல்லது களஞ்சியப்படுத்து வதற்கு முழுமையாக அல்லது பகுதியளவில் பயன்படுத்தப்படும் ஏதேனும் காணி, கட்டிடம், தாபனம், களஞ்சியம், சரக்குக் கொள்கலன், வாகனம், கலன் அல்லது வண்டி என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும் ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட எனப் பொருள்படும் ;

"செயலாளர்" என்பது கமத்தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் என்று பொருளாகும் :

"விதை" என்பது —

(1) நாற்றாக முளைத்து மாறுவதற்குத் தயாராக இருக்கும் மூலவுருவைக் கொண்டுள்ள தாவரத்தின் முதிர்ந்த சினைப்படுத்தும் பாகம் ;

(2) விதை உருளைக்கிழங்குகள், குமிழ்கள் மற்றும் வேர்த்தண்டுக்கிழங்குகள் ; அத்துடன்

(3) நடுகைப்பொருட்கள்

என்று பொருளாகும் ;

"விதை கையாளுபவர்" என்பது உற்பத்தியாளராக, இறக்குமதியாளராக, விநியோகிப்பவராக, பதப்படுத்துபவராக, மீளப்பொதிசெய்பவராக, முகவராக அல்லது சில்லறை விற்பனையாளராக அந்த விதையானது, இலங்கையில் உள்ள சந்தையில் வைக்கப்படுவதற்குப் பொறுப்பானவராயிருக்கின்றவரான எவரேனும் ஆள் என்று பொருளாகும் ;

"விதைத்தொகுதி" என்பது, கட்டுத்துண்டில் காணப்படும் காரணிகளுக்காக, அனுமதிக்கப்பட்ட தாக்கத்திறனிற்குள்ளாக உள்ள அதன் ஒவ்வொரு பாகமும் அல்லது பொதியும் ஒரு சீரானதாகவுள்ளதும் தொகுதியிலக்கத்தினால் அடையாளம் காணப்படுவதுமான திட்டவட்டமான விதையின் அளவு என்று பொருளாகும் ; அத்துடன்

"வர்க்கம்" என்பது வெறுமனே கண்ணால் கண்டறியக்கூடிய ஆகக்குறைந்தது ஒரு பண்பியல்பையேனும் கொண்டமைந்த காரணத்தினால் தெளிவாக ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தக்கூடியதாகவும் போதியளவு ஒரு சீரானதாகவும் பலதடவை இனப்பெருக்கம் செய்த பின்னரும் மாறிலியாக இருக்கின்றதுமான தனிரகப் பயிர்கள் உட்பட, ஆகக்குறைந்த வரிசையிலுள்ள தனிப்பகுப்புக்குள்ளான தாவரத்தொகுதியாக்கம் என்று பொருளாகும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்வீதி, கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.